# TNUSRB TRAINING PROGRAMME 2025
## மாதிரித் தேர்வு 1 - தமிழ் தகுதித் தேர்வு

1. "நிலவு + என்று" என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.
   a. நிலயென்று b. நிலவென்று c. நிலவன்று d. நிலவுஎன்று

2. "தொன்மை" என்னும் சொல்லின் பொருள் _________.
   a. புதுமை b. பழமை c. பொறுமை d. சீர்மை

3. வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________.
   a. வெண் + குடை b. வெண்மை + குடை
   c. வெம் + குடை d. வெம்மை + குடை

4. உடல் நோய்க்கு _________ தேவை
   a. ஔடதம் b. இனிப்பு c. உணவு d. உடை

5. "பாரத ரத்னா" என்ற விருதுக்கு ____________ என்று பொருள்.
   a. இந்தியப் புதல்வர் b. இந்தியக் கவிஞர்
   c. இந்திய மாமணி d. இந்திய வீரர்

6. "இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கை முறை" – தொடர்புடைய வினாவினைக் காட்டுக.
   a. இயற்கையோடு இணைந்து எப்படி வாழ வேண்டும்?
   b. தமிழரின் வாழ்க்கைமுறை எத்தகையது?
   c. தமிழரின் வாழ்க்கை முறையோடு ஒத்தவர்கள் யார்?
   d. இயற்கையோடு இணைந்து ஏன் வாழ வேண்டும்?

7. பிழையில்லாத தொடரைத் தேர்ந்தெடுக்க:
   a. தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக்கலை கூடம் மாமல்லபுரம்
   b. தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக்கலைக் கூடம் மாமல்லபுரம்
   c. தமிழகத்தின் மிகப்பெரிய சிற்ப கலைக்கூடம் மாமல்லபுரம்
   d. தமிழகத்தின் மிகபெரிய சிற்பக்கலைக்கூடம் மாமல்லபுரம்

8. பொருளோடு பொருந்தி வரும் ஒன்றைக் காண்க.
   a. காலை – வண்டி இழுக்கும் b. பரவை – உயிரின் வகை
   c. மணம் - பூவின் வாசம் d. கோளம் - வாசலில் போடுவது

9. வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதி _______________.
a. குறிஞ்சி b. மருதம் c. நெய்தல் d. முல்லை

10. நற்கருத்துகளை ஓரிரு வரிகளில் புதுமையாக எழுதுவது _____________.
a. கசல் b. மரபுக்கவிதை c. ஹைக்கூ d. ஹைரோ

11. காலத்தால் அழியாமல் தமிழ் ஓலைச்சுவடிகளைத் தொகுத்தவர் ____________.
a. தாராபாரதி b. வ.உ.சி c. உ.வே.சா d. பாரதியார்

12. பீலிபெய் சாகாடும் அச்சிறு அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.
குறளில் பயின்று வந்துள்ள உரிச்சொல்
a. சால b. பெயின் c. பீலி d. மிகுத்து

13. எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும் அதைத் தவிர வேறு எதுவும் நினைக்க மாட்டோன் எனக் கூறியவர் ____________.
a. தாயுமானவர் b. ஜி.யு.போப் c. தாராபாரதி d. உ.வே.சா

14. சுயம் என்பதன் பொருள் _______________.
a. வாழ்க்கை b. தனித்தன்மை c. இசை d. செழிப்பு

15. அமுதசுரபி தோன்றும் நாள் _______________.
a. வைகாசி தேய்பிறை b. வைகாசி அமாவாசை
c. வைகாசி பௌர்ணமி d. வைகாசி வளர்பிறை

16. இடுகுறிச்சிறிப்புப் பெயரை வட்டமிடுக.
a. வயல் b. வாழை c. மீன்கொத்தி d. பறவை

17. இடுகுறி பொதுப்பெயரைத் தேர்ந்தெடு:
a. இன்று b. நிலா c. மரம் d. நெல்

18. பின்வருவனவற்றுள் திருவள்ளுவரைக் குறிப்பிடாத பெயர் ______________.
a. தெய்வப்புலவர் b. புகழ்வேந்தர்
c. பொய்யாப் புலவர் d. செந்நாப் போதர்

19. அன்னை தெரசாவிற்கு _______ க்கான ‘நோபல் பரிசு’ கிடைத்தது.
a. பொருளாதாரம் b. இயற்பியல்
c. மருத்துவம் d. அமைதி

APOLLO STUDY CENTRE

20. அகர வரிசைப்படி சரியானதைத் தேர்ந்தெடு
a. கருணை, பொறுமை, இரக்கம், உண்மை
b. இரக்கம், உண்மை, கருணை, பொறுமை
c. பொறுமை, இரக்கம், உண்மை, கருணை
d. உண்மை, கருணை, பொறுமை, இரக்கம்

21. மயங்கொலிப் பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.
a. கிணறு ஆழமான உள்ளது.
b. கிளியின் அலகு சிவப்பு நிறம்
c. வானில் நிலவு ஒலி வீசுகிறது.
d. சூரியன் மேற்கில் மரைகிறது

22. உயர்வு நவிற்சி அணி என்பது ______________.
I. இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தம் குறிப்பை ஏற்றிக்கூறுவது
II. இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி வேறுபடுத்திக் காட்டுவது.
III. ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது
IV. ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது

23. “வானம் + அறிந்த“ என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________.
a. வானம் அறிந்து
b. வான் அறிந்த
c. வானமறிந்த
d. வான்மறிந்த

24. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப்பணியில் ஈடுபட்டவர் ___________.
a. பாரதிதாசன்
b. தந்தை பெரியார்
c. வ.உ.சிதம்பரனார்
d. பெருஞ்சித்திரனார்

25. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ________________.
a. மார்பு
b. கழுத்து
c. தலை
d. மூக்கு

26. கீழ் இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ___________.
a. ம்
b. ப்
c. ய்
d. வ்

27. பின்வருவனவற்றுள் வியங்கோள் வினைமுற்றுச் சொல் ________________.
a. எழுது
b. வாழியர்
c. கண்ணன்
d. பாடு

28. பொருட்பாலில் அமைந்துள்ள இயல்களின் எண்ணிக்கை ____________________.
a. இரண்டு
b. மூன்று
c. நான்கு
d. ஐந்து

29. தமிழர் மருத்துவம் என வழங்கப்படுவது ______________.
a. ஆயுர்வேத மருத்துவம்
b. யுனானி மருத்துவம்
c. சித்த மருத்துவம்
d. அலோபதி மருத்துவம்

APOLLO STUDY CENTRE

30. குமரகுருபரர் இயற்றிய நூல் ________________.

a. நாலடியார்
b. ஆசாரக்கோவை
c. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
d. திரிகடுகம்

31. பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாய் வேறுபடுத்துவது ______________.

a. மூன்றாம் வேற்றுமை உருபு
b. ஏழாம் வேற்றுமை உருபு
c. நான்காம் வேற்றுமை உருபு
d. இரண்டாம் வேற்றுமை உருபு

32. நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் பொருள்களை உணர்த்தும் வேற்றுமை ______________.

a. நான்காம் வேற்றுமை
b. ஆறாம் வேற்றுமை
c. ஐந்தாம் வேற்றுமை
d. மூன்றாம் வேற்றுமை

33. படர்க்கைப்பெயரை முன்னிலைப் பெயராய் மாற்றி அழைப்பதை ____________ என்கிறோம்.

a. எட்டாம் வேற்றுமை
b. ஏழாம் வேற்றுமை
c. ஆறாம் வேற்றுமை
d. ஐந்தாம் வேற்றுமை

34. நான்காம் வேற்றுமைக்கு உரிய உருபு ________________.

a. ஐ
b. ஆல்
c. கு
d. ஆத

35. “செம்மரம்“ என்னும் சொல் ________________ த்தொகை.

a. வினை
b. பண்பு
c. அன்மொழி
d. உம்மை

36. “கண்ணா வா!“ என்பது __________ த்தொடர்.

a. எழுவாய்
b. விளி
c. வினைமுற்று
d. வேற்றுமை

37. பொருத்துக:

A. திருவாசகம் படித்தான் — 1. ஆறாம் வேற்றுமைத்தொகை
B. தலை வணங்கு — 2. நான்காம் வேற்றுமைத்தொகை
C. சிதம்பரம் சென்றான் — 3. இரண்டாம் வேற்றுமைத்தொகை
D. கம்பர் பாடல் — 4. மூன்றாம் வேற்றுமைத்தொகை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 2 | 4 | 3 | 1 |

APOLLO STUDY CENTRE

38. மா, பலா, வாழை என்பது ____________.

a. வினைத்தொகை b. உம்மைத்தொகை
c. உவமைத்தொகை d. எதுவுமில்லை

39. செந்தமிழ் என்பது ____________.

a. உவமைத்தொகை b. வினைத்தொகை
c. பண்புத்தொகை d. உம்மைத்தொகை

40. மோர்க்குடம் என்பது ____________.

a. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
b. இரண்டாம் வேற்றுமை
c. ஏழாம் வேற்றுமைத்தொகை
d. மூன்றாம் வேற்றுமைத்தொகை

41. "நன்று நன்று" என்பது ____________.

a. உரிச்சொல் தொடர் b. வினைமுற்றுத் தொடர்
c. பெயரெச்சத் தொடர் d. அடுக்குத் தொடர்

42. சேரர்களின் தலைநகரம் __________.

a. காஞ்சி b. வஞ்சி c. தொண்டி d. முசிறி

43. பொருத்துக:

A. தூத்துக்குடி 1. குட்டி ஜப்பான்
B. சிவகாசி 2. தீப நகரம்
C. மதுரை 3. முத்துநகரம்
D. திருவண்ணாமலை 4. தூங்கா நகரம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

44. சிங்கம் __________ யில் வாழும்.

a. மாயை b. ஊழி c. முழை d. அலை

45. அயோத்திதாசர் நடத்திய இதழ் __________.

a. ஒருபைசாத் தமிழன் b. காலணாத் தமிழன்
c. அரைப்பபைசாத் தமிழன் d. அரையணாத் தமிழன்

46. இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதை ____________.
a. புதுக்கவிதை b. மரபுக்கவிதை
c. வசனகவிதை d. ஹைக்கூகவிதை

47. பொருத்துக:

A. இன்பம் தருவது 1. நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்
B. நட்பு என்பது 2. குன்றிமணியளவு தவறு
C. பெருமையை அழிப்பது 3. செல்வம் மிகுந்த காலம்
D. பணிவு கொள்ளும் காலம் 4. சிரித்து மகிழ மட்டுமன்று
E. பயனின்றி அழிவது 5. பண்புடையவர் நட்பு

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 5 | 3 |
| b. | 1 | 5 | 4 | 2 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 | 5 |
| d. | 5 | 4 | 2 | 3 | 1 |

48. “கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது”
இக்குறளில் அமைந்துள்ள அணி ____________.
a. உவமை அணி b. பிறிது மொழிதல் அணி
c. உருவக அணி d. வேற்றுமை அணி

49. விழித்து + எழும் என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.
a. விழியெழும் b. விழித்தெழும் c. விழித்தழும் d. விழித்தஎழும்

50. இன்னறும் பாப்பத்தே என்பதில் ‘பாப்பத்தே’ என்பது ___________.
a. ஏர் எழுபது b. பத்துப்பாட்டு
c. பரிபாடல் d. பதிற்றுப்பத்து

51. சிறுதாம்பு தொடுத்த - இதில் ‘தாம்பு’ என்பது ______________.
a. கயிறு b. பயிர் c. தயிர் d. வயிறு

52. உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே….
என விருந்தினர் போற்றுதலைக் கூறும் நூல் _____________.
a. அகநானூறு b. புறநானூறு c. குறுந்தொகை d. நெடுந்தொகை

53. அதிவீரராம பாண்டியர் எழுதிய புராண நூல்கள் ___________.
a. கந்தபுராணம், திருக்காளத்தி புராணம் b. லிங்கபுராணம், கூர்ம புராணம்
c. கோயிற்புராணம், திருவிளையாடல் புராணம் d. மகாபுராணம், கூர்மபுராணம்

54. என் மாமா வந்தது என்பது ______________

a. திணை வழு  b. பால்வழு  d. காலவழு  d. எதுவுமில்லை

55. திணை என்னும் சொல்லின் பொருள் ____________

a. ஒழுக்கம்  b. ஒழுக்கமின்மை  c. பயிர்  d. அமருமிடம்

56. பொருளிலக்கணம் _____________ வகைப்படும்.

a. இரண்டு  b. மூன்று  c. ஐந்து  d. ஆறு

57. பாலை நிலத்திற்குரிய பறவைகள் ____________.

a. கிளி, மயில்  b. நாரை, அன்னம்

c. புறா, பருந்து  d. எதுவுமில்லை

58. சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்கள்

a. புகார், மதுரை, வஞ்சி  b. பால, வஞ்சி, மதுரை

c. புகார், அயோத்தியா, வஞ்சி  d. அயோத்தியா, பால, புகார்

59. ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும் பாவினம் ___________.

a. அசிரியப்பா  b. வெண்பா  c. கலிப்பா  d. வஞ்சிப்பா

60. 'சித்தாளு' என்னும் கவிதையை எழுதிய கவிஞர் நாகூர் ரூமியின் இயற்பெயர் _____________.

a. முகம்மது உசேன்  b. முகம்மது ர.்.பி

c. முகம்மது கனி  d. முகம்மது கௌஸ்

61. சொல்லையும் பொருளையும் வரிசையாய் நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது ________________ அணியாகும்.

a. தற்குறிப்பேற்றம்  b. உவமை

c. நிரல்நிறை  d. தீவகம்

62. திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று அது மன்பதைக்கு – உலகுக்குப் பொது – என்றவர் யார்?

a. திரு.வி.க  b. கி.ஆ.பெ. விசுவநாதம்  c. கால்டுவெல்  d. கிரௌல்

63. அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது

a. அளவடி  b. சிந்தடி  c. நெடிலடி  d. கழிநெடிலடி

64. மாணிக்கவாசகர் எழுப்பிய ஆவுடையார் கோவில் அமைந்துள்ள இடம்

a. ராமநாதபுரம்  b. திருப்பெருந்துறை  c. வேதாரண்யம்  d. சிதம்பரம்

65. பொருத்துக:

a. வருக வருக — 1. மகிழ்ச்சி
B. அன்றே அன்றே — 2. அசைநிலை
C. நொந்தேன் நொந்தேன் — 3. துன்பம் துன்பம்
D. எறி எறி — 4. சினம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 1 | 3 | 4 | 2 |

66. பின்வருபவர்களுள் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபொழுது அவருடன் இருந்தவர் யார்?

a. நக்கீரனார் b. நல்வேட்டனார்
c. கண்ணகனார் d. சீத்தலைச் சாத்தனார்

67. கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - இங்கு வனப்பு என்னும் சொல்லால் பெறப்படும் அணி

a. சொல்பின்வரு நிலையணி b. பொருள் பின்வரு நிலையணி
c. சொற்பொருள் பின்வருநிலையணி d. பிறிது மொழிதலணி

68. ஆகு பெயர் வகையைக் கண்டறிக: நன்னூல் கற்றேன்

a. கருவியாகு பெயர் b. சொல்லாகுபெயர்
c. கருத்தாவாகுபெயர் d. காரியவாகுபெயர்

69. கொற்கை முத்தினைச் சிறப்பிக்கும் நூல்கள்

a. அகநானூறு, புறநானூறு b. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை
c. மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை d. பட்டினப்பாலை, புறநானூறு

70. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது?

a. சமுத்திரம் b. துரைசாமி c. துரை. மாணிக்கம் d. துரை சிங்கம்

71. திருவருட்பா எத்தனை தொகுதிகளைக் கொண்டது?

a. 6 b. 8 c. 4 d. 3

72. சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே - இங்கு
நல்லசெடி இளைப் பாறிடுமோ - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற கவிதைத் தொகுப்பு

a. பூத்தது மனுடம் b. புரட்சி முழக்கம்
c. உரைவீச்சு d. நூறாசிரியம்

73. பொருத்துக:

A. வைதருப்பம் 1. மதுரகவி
B. பாஞ்சாலம் 2. சித்திரகவி
C. கௌடம் 3. வித்தாரகவி
D. மாகதம் 4. ஆசுகவி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 4 | 2 | 1 | 3 |

74. திராவிட மொழிகளின் தாய் "தமிழ்" என நிறுவிய கால்டுவெல் மறைந்த இடம்
a. திருநெல்வேலி b. கொடைக்கானல் c. மதுரை d. கன்னியாகுமரி

75. பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவர் யார்?
a. இராமச்சந்திர கவிராயர் b. பகுத்தறிவுக் கவிராயர்
c. புரட்சிக்கவி d. மகாகவி

76. குன்றக்குடி அடிகளார் முடியரசனுக்கு வழங்கிய பட்டம் என்ன?
a. கவிமுரசு b. கவிக்குயில் c. கவிப்பேரரசு d. கவியரசு

77. மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது – என்று உயிர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறும் நூல்
a. திரிகடுகம் b. இனியவை நாற்பது c. திருக்குறள் d. திருவருட்பா

78. உலகம் உருண்டை வடிவானது எனக்கூறிய முதல் தமிழ்க்குரல்
a. திருவள்ளுவர் b. கலீலியோ c. நிக்கோலஸ்கிராப்ஸ் d. கம்பர்

79. யார் முதன்முதலில் தமிழ், தெலுங்கு – கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஒரே இனமாக கருதி தென்னிந்திய மொழிகள் என பெயரிட்டார்?
a. கால்டுவெல் b. வில்லியம் ஜோன்ஸ்
c. ஈராஸ் பாதிரியார் d. பிரான்சிஸ் எல்லிஸ்

80. இலக்கண குறிப்பு தருக. "விரிமலர்"
a. வினைத்தொகை b. பண்புத்தொகை
c. உரிச்சொல் தொடர் d. வினைமுற்று

81. தவறான தொடரைக் காண்க.
I. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

II. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகாது.
III. இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
IV. சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

82. “மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா”
என்று பாடியவர் யார்?
a. பாரதியார் b. பாரதிதாசன்
c. வாணிதாசன் d. கவிமணி தேசிய விநாயகம்

83. தேன்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணாவை உலகெங்கும் பரப்பியவர்
a. பரிதிமாற்கலைஞர் b. க. சச்சிதானந்தன்
c. மறைமலையடிகள் d. பெருஞ்சித்திரனார்

84. இலக்கணக்குறிப்பு தருக – தடக்கை.
a. உரிச்சொல் தொடர் b. வினைத்தொகை
c. பண்புத்தொகை d. வேற்றுமைத்தொகை

85. நன்னன் என்னும் குறுநில மன்னனை பாட்டுடைத் தலைவனாக கொண்ட நூல்.
a. கூத்தராற்றுப்படை b. திருமுருகாற்றுப்படை
c. அகநானூறு d. கலித்தொகை

86. எந்த பருவத்தை செங்கீரைப் பருவம் என்பர்?
a. 3 - 4 மாதங்கள் b. 5 – 6 மாதங்கள்
c. 6 – 7 மாதங்கள் d. 8 - 9 மாதங்கள்

87. “உழுபவருக்கே நில உரிமை இயக்கம்” தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறு பணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர்?
a. சின்னப்பிள்ளை b. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்
c. ராஜம் கிருஷ்ணன் d. பாலசரஸ்வதி

88. நாகூர் ரூமியின் இயற்பெயர் என்ன?
a. முகம்மது சூ.ஃபி b. முகம்மது அலி
c. முகம்மது ர.ஃபி d. முகம்மது பாசல்

89. இலக்கண குறிப்பு தருக: சிவப்புச் சட்டை பேசினார்
a. பண்புத்தொகை b. வினைத்தொகை
c. அன்மொழித்தொகை d. உவமைத்தொகை

90. காமராசர் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவராக பொறுப்பேற்ற வருடம்

a. 1963 b. 1954 c. 1972 d. 1939

91. தமிழ் நாடக மறுமலர்ச்சியின் தந்தை
a. சங்கரதாசு சுவாமிகள் b. கந்தசாமி
c. பம்மல் சம்பந்தனார் d. பரிதிமாற்கலைஞர்

92. “நாடகவியல்” எனும் நூலை எழுதியவர் யார்?
a. சங்கரதாசு சுவாமிகள் b. பரிதிமாற்கலைஞர்
c. பம்மல் சம்பந்தனார் d. மறைமலையடிகள்

93. கீழ்கண்டவற்றில் எது கவிஞர் முடியரசனால் எழுதப்பட்ட நூல்?
I. பூங்கொடி II. காவியப்பாவை
III. வீரகாவியம் IV. மானுடசரிதம்
இவற்றில்
a. I, II சரி b. I, II, III சரி c. II, III, IV சரி d. அனைத்தும் சரி

94. பரிதிமாற்கலைஞருக்கு “திராவிட சாஸ்திரி” எனும் பட்டத்தை வழங்கியவர் யார்?
a. மு.சி. பூர்ணலிங்கம் b. சி.வை. தாமோதரனார்
c. மறைமலையடிகள் d. திரு.வி.க

95. “தமிழகத்தின் அன்னிபெசன்ட்” எனப் போற்றப்படுபவர்?
a. மூவலூர் இராமாமிர்தம் b. டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி
c. வேலு நாச்சியார் d. மங்கம்மாள்

96. கூற்றுகள்
1. கவிஞர் முடியரசனின் இயற்பெயர் துரைராசு
2. இயற்றிய நூல்கள்: வீரப்பாவை, பூங்கொடி, காவியப்பறவை முதலியன
3. பூங்கொடி எனும் காவியத்துக்காக 1966 ல் சாகித்ய அகாதெமி விருது பெற்றார்
a. 1 மட்டும் சரி b. 1, 2 மட்டும் சரி
c. 1, 2, 3 சரி d. அனைத்தும் தவறு

97. ‘உயர்தனிச் செம்மொழி’ என்னும் கட்டுரையை பரிதிமாற் கலைஞர் எழுதிய இதழ்?
a. செந்தமிழ் b. சுதேசமித்திரன் c. இந்தியா d. திராவிட நாடு

98. முக்கூடற்பள்ளுக்குரிய பாவகை என்ன?
a. ஆசிரியப்பா b. கலிப்பா c. வஞ்சிப்பா d. சிந்துப்பா

99. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
I. மனோன்மணியம் நூல் லிட்டன்பிரபு ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி நூலைத் தழுவி எழுதப்பெற்றது

II. மனோன்மணீயம் நூலின் இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக்கதை இடம்பெற்றுள்ளது

III. மனோன்மணீயத்தில் ஐந்து அங்கங்களும், இருபது காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

IV. பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியாக பணிபுரிந்தார்.

a. I, III, IV சரி　　b. II, III, IV தவறு

c. III, IV தவறு　　d. அனைத்தும் சரி

100. உலகத்தமிழ்ச் சங்கம் எப்போது திறக்கப்பட்டது?

a. 2010　b. 2012　c. 2016　d. 2018

APOLLO STUDY CENTRE



அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது,
மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ
அதைப் பற்றியே பேசு.

-தந்தை பெரியார்